**நவம்பர் – 06**

# TNPSC துளிகள்

- “நம்ம பள்ளி, நம்ம ஊரு பள்ளி” (NSNOP) முன்னெடுப்பிற்கான பங்களிப்புகள் 1,000 கோடி ரூபாயைத் தாண்டியுள்ளன என்ற நிலையில் மேலும் இந்த நிதிகள் பள்ளிகளில் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக ஆய்வகங்கள், திறன் மிகு வகுப்பறைகள் மற்றும் பிற அத்தியாவசிய வசதிகளை நிறுவ பயன்படுத்தப்படுகின்றன.
- பிரியம்பதா ஜெயக்குமார் எழுதிய "The Man Who Fed India" என்ற வேளாண் அறிவியலாளர் M.S. சுவாமிநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம் சென்னையில் வெளியிடப்பட்டது.
- பஞ்சாபைச் சேர்ந்த நமித்பீர் சிங் வாலியா, பிரான்சில் நடைபெற்ற 3வது அன்னேமாஸ் சர்வதேச மாஸ்டர்ஸ் போட்டியில் 4வது இடத்தைப் பிடித்து சதுரங்கப் போட்டிகளின் சர்வதேச மாஸ்டர் (IM) என்ற பட்டத்தினை வென்றார்.
- இந்தோனேசிய டென்னிஸ் வீராங்கனை ஜானிஸ் ஜென், WTA (மகளிர் டென்னிஸ் சங்கம்) 250 சென்னை ஓபன் 2025 போட்டியில் ஆஸ்திரேலியாவின் கிம்பர்லி பிர்ரெல் தோற்கடித்து தனது முதல் வெற்றியைப் பெற்றார்.
  - 2002 ஆம் ஆண்டு பாலி ஓபன் போட்டியில் ஏஞ்சலிக் விட்ஜாஜாவிற்குப் பிறகு, கடந்த 23 ஆண்டுகளில் WTA போட்டிகளில் பட்டத்தை வென்ற முதல் இந்தோனேசிய பெண்மணி இவரே ஆவார்.
- 18 ஆம் நூற்றாண்டில் சாண்ட்விச்சை (அடுக்கு ரொட்டி) பிரபலப்படுத்திய ஜான் மொன்டாகுவை கௌரவிக்கும் வகையில் 2025 ஆம் ஆண்டு உலக சாண்ட்விச் தினம் ஆனது நவம்பர் 03 ஆம் தேதியன்று கொண்டாடப் பட்டது.

# தேசியச் செய்திகள்

## 5வது MFC 2025





- 2025 ஆம் ஆண்டு தேசிய கடல் மீன்வளக் கணக்கெடுப்பின் (MFC) வீட்டு வாரியானக் கணக்கெடுப்பு கட்டம் சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- இது இந்திய மீன்வளத்தின் முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்பட்ட இந்தியாவின்

இந்த மாதிரியான முதலாவது தரவுச் சேகரிப்பு ஆகும்.

- இது ஒன்பது கடலோர மாநிலங்கள் மற்றும் நான்கு ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள 4,000 கடல் மீன்பிடி கிராமங்களில் சுமார் 1.2 மில்லியனுக்கும் அதிகமான மீனவக் குடும்பங்களைக் கணக்கெடுத்தது.

## இந்தியாவின் மொத்த நிறுவப்பட்ட மின்சார உற்பத்தித் திறன்

- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதி நிலவரப்படி, இந்தியாவின் நிறுவப்பட்ட மின் உற்பத்தி திறன் 500 GW அளவைத் தாண்டியுள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் இது 249 GW ஆக இருந்தது.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, நீர் மற்றும் அணுசக்தி போன்ற புதைபடிவ எரிபொருள் சாராத மூலங்களிலிருந்து மேற்கொள்ளப்படும் மின் உற்பத்தி 256.09 GW ஆக உள்ளது.
- மொத்தத் திறனில் சுமார் 49 சதவீதப் பங்குடன், புதைபடிவ எரிபொருள் சார்ந்த மூலங்களிலிருந்து பெறப்படும் மின் உற்பத்தித் திறன் 244.80 GW ஆக இருந்தன.




## ஆதார் கொள்கை 2032 கட்டமைப்பு




- எதிர்காலத்திற்கு ஏற்ற டிஜிட்டல் அடையாளத்தை வலுப்படுத்துவதற்காக இந்தியத் தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) ஆனது ஆதார் கொள்கை 2032 கட்டமைப்பை

வெளியிட்டுள்ளது.

- இந்த கட்டமைப்பு ஆனது செயற்கை நுண்ணறிவு, தொடர் சங்கிலித் தொழில்நுட்பம், குவாண்டம் கணினி மற்றும் மேம்பட்ட மறைகுறியாக்கத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிறது.
- இந்தியாவின் டிஜிட்டல் அடையாள சூழல் அமைப்பை மறு நிர்ணயம் செய்வதற்கும் அடுத்தத் தலைமுறை தொழில்நுட்பத்திலான டிஜிட்டல் நிர்வாகத்தை விரைவுபடுத்தச் செய்வதற்குமான ஒரு செயல் திட்டத்தினை வழங்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## சமூக மேம்பாட்டிற்கான உலக உச்சி மாநாடு




- சமூக மேம்பாட்டுக்கான உலக உச்சி மாநாடு ஆனது கத்தாரின் தோஹாவில் நடத்தப் பட்டது.
- சமூக நீதிக்கான உலகளாவிய கூட்டணி குறித்த சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் (ILO) அமைச்சர்கள் பேச்சுவார்த்தையில் இந்தியா பிரதிநிதித்துவப்படுத்தப்படும்.
- இந்த உச்சி மாநாட்டின் போது சமூக மேம்பாட்டின் மூன்று தூண்களை வலுப்படுத்துவது குறித்த உயர்மட்ட வட்ட மேசை மாநாடு நடைபெறும்.
- தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் மற்றும் இந்திய வணிக மற்றும் வல்லுநர்கள் சபை (IBPC) ஆகியவை தேசிய தொழில் துறை சேவை (NCS) வலை தளம் குறித்த நிகழ்வினையும் ஏற்பாடு செய்தன.

## இரண்டாவது உலகளாவிய நல்லிணக்க முன்னெடுப்பு

- ரியாத் தொடரின் ஒரு பகுதியாக 'இந்திய வாரம்' தொடங்கியதுடன், சவுதி அரேபியாவின் ஊடக அமைச்சகம் ஆனது இந்த நிகழ்வைத் தொடங்கியது.
- இந்த முன்னெடுப்பானது, நாட்டின் குடியிருப்பாளர்களின் கலாச்சாரப் பன்முகத் தன்மையைக் கொண்டாடுவதோடு, அவர்களின் பங்களிப்புகள் மற்றும் சமூகத்தில் அவர்களின் ஒருங்கிணைப்பை எடுத்துக்காட்டுகிறது.
- இந்தியக் கலாச்சாரம் மற்றும் இந்தியாவிற்கும் சவுதி அரேபியாவிற்கும் இடையிலான உறவுகளை இணைத்தல் ஆகியவற்றினை வெளிப்படுத்தும் இசை, நடனம், உணவு,

கலை மற்றும் கைவினைப் பொருட்கள் ஆகியவற்றினை உள்ளடக்கிய நிகழ்வுகளும் இதில் அடங்கும்.

❖ இந்த நிகழ்வில், சவுதி தொலைநோக்கு கொள்கை 2030 திட்டத்தின் கீழ் உள்ளடக்கம், சகவாழ்வு மற்றும் பன்முக கலாச்சாரப் புரிதலை ஊக்குவிக்கின்ற 14 கலாச்சாரங்கள் இடம் பெறும்.




## சீனாவில் எரிபொருள் மாற்றம்




❖ சீன நாடானது, திரவ உப்பினை குளிர்விப்பானாகக் கொண்ட தோரியம் எரிபொருள் உலையில் (TMSR) முதன்முதலில் எரிபொருளைத் தோரியத்திலிருந்து யுரேனியமாக மாற்றுவதை வெற்றிகரமாக அடைந்தது.

❖ ஷாங்காய் பயன்பாட்டு இயற்பியல் நிறுவனம் (SINAP) ஆனது அணு உலையிலிருந்து

பெறப்பட்ட செல்லுபடியாகும் சோதனைத் தரவை உறுதிப்படுத்தியது.

- திரவ உப்பினைக் குளிர்விப்பானாகக் கொண்ட உலைகளில் தோரியத்தை அணு எரிபொருளாகப் பயன்படுத்தலாம் என்பதை இந்த சோதனை நிரூபிக்கிறது.
- TMSR உலைகள் உப்பினைக் குளிரூட்டியாகப் பயன்படுத்துகின்றன என்பதால், இந்த உலைகளுக்குத் தண்ணீர் தேவையில்லை என்ற ஒரு நிலையில் இவை வளிமண்டல அழுத்தத்திலேயே செயல்படுகின்றன.
- சீனா முழுமையான மற்றும் சுயாதீனமான TMSR தொழில்நுட்பம் மற்றும் தொழில் துறை தொடர்களை நிறுவியுள்ளது.
- 100 மெகாவாட் திறன் கொண்ட செயல்விளக்க உலையை 2035 ஆம் ஆண்டிற்குள் செயல்பட செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
- சீனாவின் தோரியம் இருப்புக்கள் குறைந்தபட்ச கதிரியக்கக் கழிவுகளுடன் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு ஆற்றலை வழங்கக் கூடியது.

## ஆசிய-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மாநாடு 2025




- தென் கொரியாவின் கியோங்ஜூவில் 21 ஆசிய-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (APEC) அமைப்பு நாடுகளின் தலைவர்கள் தங்கள் வருடாந்திர உச்சி மாநாட்டை நிறைவு செய்தனர்.
- வர்த்தகம் சார்ந்தப் பதட்டங்களைத் தணிக்க ஒப்புக் கொண்ட அமெரிக்கா மற்றும் சீனாவின் தலைவர்களுக்கு இடையிலான சந்திப்பைத் தொடர்ந்து இந்த உச்சி மாநாடு நடைபெற்றது.
- APEC தலைவர்கள் பிராந்தியப் பொருளாதார ஒத்துழைப்பை வலியுறுத்தியும் உலகளாவிய வர்த்தகச் சவால்களை ஒப்புக் கொண்டும் ஒரு கூட்டு அறிக்கையை வெளியிட்டனர்.
- தடையற்ற/சுதந்திரமான, வெளிப்படையான, நியாயமான, பாகுபாடற்ற மற்றும் கணிக்கக் கூடிய வர்த்தகச் சூழலை ஊக்குவிக்கும் புத்ராஜெயா தொலைநோக்கு 2040 கொள்கையை உறுப்பினர்கள் நாடுகள் மீண்டும் உறுதிப்படுத்தின.

- இந்த உச்சி மாநாடு ஆனது செயற்கை நுண்ணறிவு, மக்கள்தொகை சார்ந்த சவால்கள் மற்றும் கலாச்சாரத் தொழில்துறைகள் குறித்த ஒத்துழைப்பு குறித்தும் விவாதித்தது.
- 1989 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட APEC, தடையற்ற மற்றும் திறந்த வர்த்தகம் மற்றும் முதலீட்டை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## மலேசியாவில் UPI பண வழங்கீடுகள்




- இந்தியப் பயணிகள் இனி மலேசியாவில் பணம் செலுத்துவதற்கு ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தை (UPI) பயன்படுத்தலாம்.
- இந்தியத் தேசியக் கொடுப்பனவுக் கழகத்தின் சர்வதேசப் பண வழங்கீட்டு லிமிடெட் ((NPCI-NIPL) மற்றும் ரேஸர்பே கர்லெக் இடையேயான கூட்டாண்மை மூலம் இந்த விரிவாக்கம் மேற்கொள்ளப் படுகிறது.
- UPI வசதியாக்கப்பட்ட செயலிகள் மூலம் பரிவர்த்தனைகள் ஆனது உடனடியாகவும், பாதுகாப்பானதாகவும் மற்றும் தடையற்றவையாகவும் உள்ளன.
- இந்த முன்னெடுப்பு ஆனது 2025 ஆம் ஆண்டு உலக நிதி சார் தொழில்நுட்ப நிகழ்ச்சியின் (GFF) போது தொடங்கப் பட்டது.


## IIBX தளத்தில் சிறப்புப் பிரிவு வாடிக்கையாளர் - SBI

- பாரத் ஸ்டேட் வங்கி இந்திய சர்வதேச விலையுயர்ந்த உலோகங்களின் பரிமாற்ற (புல்லியன் எக்ஸ்சேஞ்ச்) (IIBX) தளத்தில் ஒரு சிறப்புப் பிரிவு வாடிக்கையாளராக (SCC) அதன் தொடக்க தங்க வர்த்தகத்தைச் செயல்படுத்தியது.
- 2024 ஆம் ஆண்டில் IIBX தளத்தில் வர்த்தகம் மற்றும் தீர்வு (TCM) உறுப்பினரான முதல் வங்கி SBI ஆகும்.

- ஒரு சிறப்புப் பிரிவு வாடிக்கையாளராக, SBI வங்கி நிறுவனமானது நகைக்கடை நிறுவனங்கள், விலையுயர்ந்த உலோகங்களின் ஒப்பந்தாரர்கள் மற்றும் பிற பங்கு தாரர்களுக்கு தங்க/புல்லியன் பரிவர்த்தனைகளை எளிதாக்குகிறது.
- இந்தியாவின் தங்க இறக்குமதி முறையில் செயல்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் அணுகலை மேம்படுத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.
- SBI நிறுவனத்தின் பங்கேற்பு GIFT நகரத்தை உலகளாவிய நிதி மையமாக மேம்படுத்தி, தங்க வர்த்தகத்தை நவீனமயமாக்குவதற்கான அரசாங்க முன்னெடுப்புகளுடன் ஒருங்கிணைகிறது.




## ஊழியர்களின் சேர்க்கைத் திட்டம் 2025




- ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) ஆனது 2025 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று 2025 ஆம் ஆண்டு ஊழியர்களின் சேர்க்கைத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.
- இந்தத் திட்டமானது 2017 ஆம் ஆண்டு ஜூலை 01 முதல் 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 31

ஆம் தேதி வரை ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி (EPF) பலனில் இருந்து விடுபட்ட ஊழியர்களைச் சேர்க்க முதலாளிகளை அனுமதிக்கிறது.

- ❖ இந்தத் திட்டம் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் தேதியன்று முடிவடையும் ஆறு மாதங்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும்.
- ❖ முதலாளிகள் ஒவ்வொரு பணியாளருக்கும் முக அங்கீகார அடிப்படையிலான பொதுக் கணக்கு எண்ணை (UAN) UMANG செயலி மூலம் உருவாக்க வேண்டும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்தியாவின் கனமான தகவல் தொடர்பு செயற்கைக்கோள் CMS-03




- ❖ இஸ்ரோ நிறுவனமானது, CMS-03 எனப்படும் இந்தியாவின் கனமான தகவல் தொடர்பு செயற்கைக்கோளை 2025 ஆம் ஆண்டு நவம்பர் 02 ஆம் தேதியன்று வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.
- ❖ 4,410 கிலோகிராம் எடை கொண்ட CMS-03, ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி நிலையத்திலிருந்து அதன் திட்டமிடப்பட்ட புவி ஒத்திசைவுப் பரிமாற்றச் சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தப் பட்டது.
- ❖ இந்த செயற்கைக்கோள் ஆனது 'பாகுபலி' ஏவு கலம் என்றும் அழைக்கப்படும் LVM3-M5 ஏவு கலத்தின் மூலம் ஏவப்பட்டது.
- ❖ இது முற்றிலும் இந்தியாவில் உருவாக்கப்பட்ட ஒரு புதிய தலைமுறை நுட்பத்திலான கனரக சுமை தூக்கும் ஏவு வாகனம் ஆகும்.
- ❖ CMS-03 என்பது இந்தியா மற்றும் சுற்றியுள்ள கடல் பகுதி முழுவதும் தொலைதொடர்பு, தொலைக்காட்சி ஒளிபரப்பு மற்றும் இணைய சேவைகளை வழங்குவதற்காக என்று வடிவமைக்கப் பட்ட ஒரு பல கற்றையிலான தகவல் தொடர்பு செயற்கைக்கோள் ஆகும்.


## ரஷ்யாவின் போஸிடான் ஆளில்லா விமானம்

- ❖ ரஷ்யா 'கபரோவ்ஸ்க்' எனப்படும் தனது புதிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலினைப் படையில் இணைத்தது.

- இது 'டூம்ஸ்டே எறிகணை' என்றும் அழைக்கப்படும் 'போஸிடான்' என்ற நீருக்கடியில் இயங்கும் அணுசக்தி கொண்ட ஆளில்லா வாகனங்களை சுமந்து செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்த எறிகணை கண்டம் விட்டு கண்டம் பாயும் திறன் கொண்டது என்பதோடு மேலும் கடலோர நாடுகளை மாபெரும் அழிவின் மூலம் "முற்றிலும்" அழிக்கக் கூடியது.




## ஆல்ஃப்வென் அலைகள்




- அறிவியலாளர்கள் முதன்முறையாக சூரியனின் கரோனா அடுக்கில் ஆல்ஃப்வென் அலைகளை நேரடியாகக் கண்டறிந்துள்ளனர்.
- இந்தக் காந்த அலைகள் சூரியனின் வெளிப்புற வளிமண்டலத்தை வெப்பப் படுத்த தேவையான ஆற்றலில் குறைந்தது பாதியைக் கொண்டிருக்கலாம்.
- சூரியனின் கரோனா அடுக்கின் வெப்பநிலையானது, 10,000 டிகிரி பாரன்ஹீட் (5,500 டிகிரி செல்சியஸ்) கொண்ட அதன் மேற்பரப்பை விட அதிகமாக, 2 மில்லியன் டிகிரி பாரன்ஹீட் (1.1 மில்லியன் டிகிரி செல்சியஸ்) வெப்பநிலை வரை எட்டுகிறது.
- ஹவாயில் உள்ள டேனியல் K. இனூயே சூரிய தொலைநோக்கியை (DKIST) பயன்படுத்தி இந்தக் கண்டுபிடிப்பு மேற்கொள்ளப்பட்டது.

- கரோனா அடுக்கில் சிவப்பு மற்றும் நீல டாப்ளர் மாற்றங்கள் ஆல்ஃப்வென் அலைகள் இருப்பதை உறுதி செய்தது.

## நகரத்தை அழிக்கும் அளவிலான சிறுகோள் 2024 YR4

- 2024 YR4 சிறுகோள் ஆனது 2032 ஆம் ஆண்டில் சந்திரனுடன் மோதக்கூடும்.
- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியின் (JWST) அவதானிப்புகளின்படி, இந்த சிறுகோள் தோராயமாக 6 மீ அகலம் கொண்டது.
- வழக்கமான இயக்க விலகல் முறைகள் இந்தச் சிறுகோளை திசை திருப்ப போதுமானதாக இல்லாததால் அணுசக்தி பிளவினைப் பயன்படுத்துவது குறித்து நாசா பரிசீலித்து வருகிறது.
- அணுசக்தி பயன்பாட்டிற்கான திட்டச் செயல்பாடுகள் 2029 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து 2031 ஆம் ஆண்டின் பிற்பகுதி வரை மதிப்பிடப் படுகின்றன.
- அணுசக்தி பயன்பாடு மூலமான வெடிப்பு, சிறுகோளின் மேற்பரப்பின் ஓர் அடுக்கை ஆவியாக்கி, நேரடித் தொடர்பு இல்லாமல் அதன் பாதையை மாற்றும்.
- சந்திரனின் மீதான இதன் தாக்கம் பூமியின் தாழ்வான சுற்றுப்பாதையில், செயற்கைக் கோள்கள் மற்றும் மனித விண்வெளி பயணங்களுக்கு அச்சுறுத்தலாக அமைகின்ற மிகவும் குறுகிய அளவிலான விண்கற்களின்/மைக்ரோமீட்டோராய்டு பாய்ச்சலை தற்காலிகமாக அதிகரிக்கக் கூடும்.




# மாநிலச் செய்திகள்

## உத்தரகாண்ட் வெள்ளி விழா

- உத்தரகாண்ட் மாநில உருவாக்கத்தின் வெள்ளி விழா குறித்து இந்தியக் குடியரசுத் தலைவர் உத்தரகாண்ட் சட்டமன்றத்தில் உரையாற்றினார்.

- உத்தரகாண்ட் 2000 ஆம் ஆண்டு நவம்பர் 09 ஆம் தேதியன்று இந்தியாவின் 27வது மாநிலமாக உருவாக்கப்பட்டது.
- இது உத்தரப் பிரதேசத்தின் வடக்கு மலைப்பாங்கான மாவட்டங்களிலிருந்து பிரிக்கப் பட்டது.
- ஆரம்பத்தில் உத்தராஞ்சல் என்று பெயரிடப்பட்ட இந்த மாநிலம், 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அதிகாரப்பூர்வமாக உத்தரகாண்ட் என மறுபெயரிடப் பட்டது.




## Garbage Dumping Festival - பிரச்சாரம்




- பெங்களூரு பெருநகர ஆணையம் (GBA) ஆனது, 'குப்பை கொட்டும் விழா' என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியது.
- விழிப்புணர்வு ஏற்படுத்தவும், சுற்றுப்புறங்களைச் சுத்தமாக வைத்திருக்கவும் வேண்டி குடிமைப் பணிச் சேவையாளர்கள் வேண்டுமென்றே, வழக்கமாகக் குப்பைகளை வெளியே கொட்டுபவர்களின் வீடுகளுக்கு வெளியே குப்பைகளைக் கொட்டினர்.
- இந்தப் பிரச்சாரம் ஆனது பனசங்கரியில் தொடங்கி 218 வீடுகளை இலக்காகக் கொண்டு, 2.8 லட்சம் மதிப்புள்ள அபராதத்தை வசூலித்தது.
- பெங்களூரு திடக்கழிவு மேலாண்மை நிறுவனம் (BSWML) ஆனது, இலவசமாகப்


பிரிக்கப் பட்ட கழிவுகளை அகற்றுவதற்கும், குப்பைகள் அதிகம் கொட்டப்படும் பகுதிகளைக் குறைப்பதற்கும் பெங்களூரு முழுவதும் 65 கழிவுச் சேகரிப்பு மையங்களை நிறுவத் திட்டமிட்டுள்ளது.

## ஒடிசாவில் சிலிக்கான் கார்பைடு குறைக்கடத்தி ஆலை

- புவனேஸ்வரில் அமைக்கப்பட உள்ள இந்தியாவின் முதல் சிலிக்கான் கார்பைடு (SiC) குறைக்கடத்தி ஆலைக்கு ஒடிசா முதல்வர் அடிக்கல் நாட்டினார்.
- 2,067 கோடி ரூபாய் முதலீட்டுடன், இந்தியக் குறைக்கடத்தி திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப் பட்ட இந்த ஆலை 2027-28 ஆம் ஆண்டிற்குள் செயல்பாட்டிற்கு வரும்.
- இந்த ஆலை மின்சார வாகனங்கள், இரயில்வே, தரவு மையங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் தொழில்துறை வாகன அமைப்புகள் போன்ற முக்கியமான துறைகளுக்கு ஆதரவளிக்கும்.




## லடாக்கில் உள்ள சரணாலயங்களின் விரிவாக்கம்




- லடாக் மாநில வனவிலங்கு வாரியம் ஆனது கரகோரம் வனவிலங்கு சரணாலயத்தை 16,550 சதுர கிலோமீட்டராக விரிவுபடுத்த முன்மொழிந்துள்ளது.

- சாங்தாங் வனவிலங்கு சரணாலயத்தினை 9,695 சதுர கிலோமீட்டராக விரிவு படுத்தவும் முன்மொழியப்பட்டுள்ளது.
- 1987 ஆம் ஆண்டில் வெளியான அறிவிப்புகள், கரகோரத்திற்கு சுமார் 5,000 சதுர கிலோ மீட்டரும் சாங்தாங்கிற்கு 4,000 சதுர கிலோமீட்டரும் என பதிவு செய்தன.
- இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) இரண்டு சரணாலயங்களிலும் அதிக வளங்காப்பு மதிப்புள்ள பகுதிகளை அடையாளம் கண்டுள்ளது.
- கரகோரத்தில் 1,742 சதுர கிலோமீட்டர் மற்றும் சாங்தாங்கில் 164 சதுர கிலோமீட்டர் உட்பட சில மக்கள் வசிக்கும் பகுதிகள் இதில் விலக்கப்படும்.
- இந்தத் திருத்தங்கள், உள்ளூர்வாசிகள் சிறிய அளவிலான சுற்றுலா உள்கட்டமைப்பை உருவாக்குவதையும், அத்தியாவசிய சேவைகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

# விளையாட்டுச் செய்திகள்

## ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகள் 2025



| RANK | COUNTRY | GOLD | SILVER | BRONZE | TOT |
|---|---|---|---|---|---|
| 1 | CHN | 63 | 49 | 35 | 147 |
| 2 | UZB | 37 | 16 | 28 | 81 |
| 3 | KAZ | 24 | 29 | 40 | 93 |
| 4 | IRI | 22 | 18 | 36 | 76 |
| 5 | THA | 15 | 15 | 18 | 48 |
| 6 | IND | 13 | 18 | 17 | 48 |

- பஹ்ரைனின் மனாமாவில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் 13 தங்கம், 18 வெள்ளி மற்றும் 17 வெண்கலம் உட்பட இந்தியா 48 பதக்கங்களை வென்றது.
- மகளிர் கபடி அணி ஈரான் அணியைத் தோற்கடித்து இந்த விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் முதல் தங்கத்தை வென்றது.
- பிரதீஸ்மிதா போய் மகளிருக்கான 44 கிலோ பளுத்தூக்குதல் கிளீன் அண்ட் ஜெர்க் பிரிவில் உலக இளையோர் சாதனையைப் படைத்து தனிநபர் பிரிவில் தங்கம் வென்றார்.
- மகளிருக்கான குராஷ் போட்டியில் வெண்கலம் வென்ற குஷி இந்தியாவிற்கான முதல் பதக்கத்தை வென்றார்.

- ரஞ்சனா யாதவ் 5000 மீட்டர் பந்தயத்தில் (வேகநடை) வெள்ளி வென்று இந்தியாவின் முதல் தடகளப் பதக்கத்தை வென்றார்.
- இந்தப் பதக்க எண்ணிக்கையானது, செனகலின் டாக்கரில் நடைபெற உள்ள 2026 ஆம் ஆண்டு இளையோர் ஒலிம்பிக் போட்டிகளுக்கு இந்திய விளையாட்டு வீரர்களைத் தகுதிப் பெறச் செய்தது.

# முக்கிய தினங்கள்

## உலக ஜெல்லிமீன் தினம் 2025 - நவம்பர் 03




- இந்த நாள் கடலின் பழமையான மற்றும் கண்கவர் உயிரினங்களில் ஒன்றைக் கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஜெல்லிமீன்கள் டைனோசர்களுக்கு முன்னதாகவே, 500 மில்லியன் ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளன.
- அவற்றுக்கு மூளை, இதயம் மற்றும் எலும்புகள் இல்லை என்றாலும் ஒளி மற்றும் இயக்கத்தை உணர உதவும் நரம்பு வலையமைப்புகள் உள்ளன.
- டூரிடோப்சிஸ் டோஹ்ர்னி போன்ற சில இனங்கள் இளமை நிலைக்குத் திரும்பி கால வரையின்றி வாழ முடியும் என்பதால், "அழியாத ஜெல்லிமீன்கள்" என்று அழைக்கப் படுகின்றன.
- பல ஜெல்லிமீன்கள் ஒளியை உற்பத்தி செய்து உயிர்வாழ்வதற்குப் பயன்படுத்தப் படுகின்ற "உயிரொளிர்வு" திறன் கொண்டவை (பயோலுமினசென்ட்) என மரபணு ஆராய்ச்சியில் ஆய்வு செய்யப் பட்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★